DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 844/2020** |
| Deposition of Witness for | : PW5 |
| Name | : கந்தசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.06.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24 June 2026.

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது புளியம்பட்டியில் வசித்து வருகிறேன். எதிரியை தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது கையொப்பம் என்னுடையது இல்லை. அத்தாட்சியில் காண்பிக்கப்படும் 2–வது கையொப்பம்என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் போலிசார் விசாரணையில் கடந்த 24.07.2017–ம் தேதி குற்ற எண். 245/2017 பிரிவுகள் 457, 380 r/w 511 IPC வழக்கின் தொடர்புடைய எதிரி பொன்பாக்கியராஜ் (எ) பாக்கியமுத்து என்பவரை சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய போலிசார் என் முன்பாகவும், சேகர் முன்பாகவும், எதிரியை செந்தமிழ் ஐ.டி.ஐ பக்கம் கைது செய்து எதிரி எவ்வித அச்சுறுத்தலும் அசை வார்த்தை கூறாமல் எதிரியாகவே தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் எங்கன் முன்னிலையில் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கடந்த 19.10.2017–ம் தேதி இரவு சுமார் 1.00 மணியளவில் எதிரிக்கு சொந்தமான TN79A1576 என்ற Honda dream வாகனத்தின் மூலம் சங்கரன்கோவிலில் இருந்து புளியங்குடி செல்லும் ரோட்டில் உள்ள இந்திய ஒன் ATM–ல் சுத்தி, டெஸ்டர், கட்டிங்பிளேடு, கட்டர் ஆகியவை மூலம் ATM–ல் சென்டரை உடைக்க முயற்சி செய்து அது பலன் அளிக்காததால் அதன் பின்பு திருடும் முயற்சி கைவிடப்பட்டு எதிரி அவரது ஊருக்கு திரும்ப செல்லும் போது அங்கு வாகனத்தனிக்கையில் ஈடுபட்ட போலிசார் எதிரியை CCTV–ல் பதிவான CD–யில் உள்ள முகத்தோற்றத்தின் அடிப்படையில் எதிரியை எனது முன்பாக கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சேகரும் சட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் அதனை தொடர்ந்து அத்தாட்சியில் நானும் சேகரும் சட்சிகளாக கையொப்பம் செய்தோம் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு

தற்போது எதிரியை விடுவிப்பதற்காக நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியாகாது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.